சிவாயநம

திருச்சிற்றம்பலம்

**திருத்தொண்டர் வரலாறு**

**முன்னுரை**





மதிவள் சடைமுடி மன்றுளாரை முன்

துதிசெயும் நாயன்மார் தூயசொல் மலர்ப்

பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை

விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே !

(சேக்கிழார் பெருமான்)

நற்றுணையாவது நமச்சிவாயவே !!

கயிலையின் கண், கண்ணுதலோன் எண்ணிய வாங்கு திண்ணிய மனத்தவராய், அணுக்கத்தொண்டராய் அருள் பெற்ற, சுந்தரர் இறைவனார் திருவுளத்தால் விண்ணுலகினின்றும் மண்ணுலகில் அவதரித்தார். மன்றுளாரை முன் துதிசெய்து நலம்பெற்ற அடியார் பெருமக்கள் அறுபத்துமூவரின் சீரும் சிறப்பும் பார்முழுதும் தெரிந்துக்கொள எண்ணியே சுந்தரரின் மண்ணுலக அவதாரத்திற்கு இறையருள் கூடிற்று.

இவ்வடியார் பெருமக்களை அகிலத்திற்கு அறிமுகப்படுத்தியதே ஆலமுண்ட கண்டன், ஆதிரை அண்ணல், அப்பன் சிவபெருமான் தான்.

“தில்லைவாழ் அந்தனர் தம் அடியார்க்கும் அடியேன்” என்று முதலடி எடுத்துக் கொடுத்ததே முதற் பொருள்தான். அது தொடங்கி ஆலால சுந்தரரும், அறுபத்து மூவரின் மாண்பினையும்

9 தொகையடியார்களின் சிறப்புகளையும் மண்ணுலகு, உணர்ந்து ஒளிர்ந்து உய்யுமாறு பாடியருளினார்.

நம்பி ஆருரைத் தொடர்ந்து நம்பி ஆண்டார் நம்பி, இவ்வறுபான் மூவர் மீதும் அந்தாதிப்பாட, அதைத் தழுவி சேக்கிழார் சுவாமிகளும் பெரியபுராணமாக போற்றும் தகைத்தான திருத்தொண்டர் புராணத்தை, மக்கள் கற்க, மண்ணுலகில் நிற்க, என்னும் நிலையில் விரித்துரைத்தார்.

“உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரியவன்” என்று இறையனார் அடியெடுத்துக் கொடுக்க, முழுப்புராணத்தையும் அருளி அறுபான் மூவரையும் அகம்முழுவதும் நிறைத்து ஆயுள் முழுவதும் நினைந்து அம்பலக் கூத்தனின் அருட்கடலைச் சேர்ந்தார் சேக்கிழார் என்கிறார் உமாபதிசிவாச்சாரியார்.

“தொண்டர் சீர் பரவு சேக்கிழார் குரிசில் தூய தில்லைநகர் தன்னிலே

பண்டு மூவர் பதிகத்து வந்த அறுபத்து மூவர் கதைதனை உணர்ந்து

அண்டவாணர் அடியார்கள் தம்முடன் அருந்த வந்தனில் இருந்து பின்

இண்டை வைத்த சடையம்பலத்தவன் எடுத்த பாத நிழலெய்தினார்”

(உமாபதிசிவச்சாரியார்)

அம்பலவாணன் அடியெடுத்துக் கொடுத்த தில்லைவாழ் அந்தணர் தொடங்கியே இப்பெருங்கதை விரிகிறது…

(எழுத்து ஆக்கம் :- ஆன்மிகச் செம்மல், சிவ சு. நாகராஜன் தலைவர், சேக்கிழார் அறநெறி இயக்கம், கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா)